# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2020 சனவரி

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

இவ்வினாப்பத்திரத்தின் நோக்கம், பாடத்தின் சகல பரப்புகளினதும் ஒட்டுமொத்த அறிவைப் பரீட்சிப்பதாக இருந்தது. பாடம் தொடர்பான நடைமுறை நிலைமைகள்கூட பரீட்சிக்கப்பட்டன. பரீட்சகரின் அறிக்கையினுடைய பிரதான நோக்கம், எதிர்காலப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பரீட்சார்த்திகளால் குறைவான புள்ளிகள் பெறப்பட்ட பாடப் பரப்புகள் மீது கவனத்தைச் செலுத்துவதாகும்.

மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளைத் தவிர, ஏனைய பரீட்சார்த்திகளால் இப்பரீட்சையில் நன்றாக விடையளிப்பதற்கு முடிந்திருந்தது. விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட பொதுவான ஒரு சில பலவீனங்கள் கீழே தரப்படுகின்றன:

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

இந்தப் பகுதியில் வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடத்தின் முழுப் பகுதியும் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். மொத்தமுள்ள 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் குறிப்பிடத்தக்களவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் **1.1, 1.2, 1.4, 1.5, 1.7, 1.12, 1.20** ஆகியவற்றுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருக்கவில்லை. வினாக்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு:

**1.1** பெரும்பாலான பரீட்சார்த்திகள் மனிதத் தேவைகளுக்கும் மனித விருப்பங்களுக்குமிடையிலான வேறுபாடு பற்றிய புரிதலைக் கொண்டிருக்கவில்லை. இதனால் அதிகளவானவர்கள் மனித தேவைகளை உள்ளடக்கிய விடைகளையும்கூட தெரிவு செய்திருந்தனர்.

**1.2** அதிகளவான பரீட்சார்த்திகள் முகாமைச் செயன்முறையின் தொழிற்பாடுகள் பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் வினாவை வாசிக்கும்போது வினாவில் காணப்பட்ட ‘‘அல்லாதது’’ என்ற சொற்பதத்தைக் கருத்திற் கொண்டிருக்கவில்லை. இதனால், வினாவில் தரப்பட்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையை அவர்களால் குறிப்பிட முடியவில்லை.

**1.4** பெரும்பாலான பரீட்சார்த்திகள் போட்டரின் ஐந்து படைகள் மாதிரியின் கூறுகளை அடையாளங் கண்டிருக்கவில்லை. எனவே பரீட்சார்த்திகள் போட்டரின் ஐந்து படைகள் மாதிரி பற்றிய நியாயமானளவு அறிவினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும், மாணவர்கள் வினாவை வாசிக்கும்போது வினாவில் தரப்பட்ட ‘‘அமையாதது’’ என்ற சொற்பதம் குறித்து விசேட கவனத்தைச் செலுத்தியிருக்கவில்லை.

**1.5** பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் பற்றிய புரிந்துணர்வு காணப்படவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைக்குப் பதிலாக ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.7** பெரும்பாலான பரீட்சார்த்திகள் போட்டரின் பெறுமதிச் சங்கிலிக்கு இணங்க, முதன்மை நடவடிக்கை பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் சரியான விடைக்குப் பதிலாக விடை இலக்கம் 1 இல் தரப்பட்ட ‘‘உட்கட்டமைப்பு’’ என்ற விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.12** பெரும்பாலான பரீட்சார்த்திகள் பிலிப் கொட்லரின் கருத்திற்கிணங்க வெற்றிகரமான பண்டக்குறி ஒன்றின் பண்பியல்புகளை அடையாளங் கண்டிருக்கவில்லை. மேலும், பரீட்சார்த்திகள் வினாவை வாசிக்கும்போது வினாவில் தரப்பட்ட ''அமையாதது'' என்ற சொற்பதம் தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்தவில்லை.

**1.20** பெரும்பாலானவர்களிடம் வேலை விபரிப்புக்கும் வேலைக் குறிப்பீட்டிற்குமிடையிலான வேறுபாடுகள் பற்றிய புரிந்துணர்வு காணப்படவில்லை. அவர்களில் பலர் வேலை விபரிப்பு என்ற சரியான விடைக்குப் பதிலாக வேலைக் குறிப்பீடு என்ற விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் சுய கற்றல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் மீதான தங்களுடைய அறிவை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலே குறிப்பிட்ட வினாக்களைத் தவிர ஏனைய வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். வினா இலக்கம் 1 இற்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை, முன்னைய பரீட்சைகளுடன் ஒப்பிடுகையில் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

## பகுதி B

இப்பகுதியானது 04 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. அவை ஒவ்வொன்றுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டிருந்தன.

### வினா இல. 02

இந்த வினா வியாபார நிறுவனம் மற்றும் பூகோளமயமாதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**பகுதி (a)** **(i)** இங்கு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் பண்பியல்புகள் பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(ii)** இங்கு பங்குடமை ஒன்றுடன் ஒப்பிடுகையில் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் அனுகூலங்களை இனங்காணுமாக கேட்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (b)** இப்பகுதியில் பூகோளமயமாதலில் காணப்படும் வாய்ப்புகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. இவ்வினா நியாயமானளவு இலகுவானதாகக் காணப்பட்டதுடன் பெரும்பாலானவர்கள் தங்களது பொது அறிவைப் பயன்படுத்தி விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

### வினா இல. 03

இவ்வினா மனித வள முகாமைத்துவம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்த்தது.

**பகுதி (a)** இப்பகுதியில் வேலைக்கு அறிமுகப்படுத்தலானது நிறுவனமொன்றிற்கு ஏன் முக்கியமானது என்பதை இனங்காண்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையை எழுதி, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அவர்களில் சிலர் ''வேலைக்கு அறிமுகப்படுத்தல்'' என்ற சொற்பதத்தை விளங்கிக்கொண்டிருக்காததுடன் அவர்களுடைய பொது அறிவைக் கொண்டு தெளிவற்ற விடைகளை எழுதியிருந்தனர். இது, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் பரீட்சார்த்திகள் கற்றல் புத்தகத்தை சரியாகக் படித்திருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

**பகுதி (b)** இப்பகுதி மனித வள முகாமைத்துவத்தின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள், நோக்கங் களுக்குப் பதிலாக மனித வள முகாமைத்துவத் தொழிற்பாடுகளை எழுதியிருந்தனர்.

## வினா இல. 04

இது நிறுவனச் சந்தைப்படுத்தலுக்கு தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**பகுதி (a)** சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள், சந்தைப்படுத்தலுக்கு தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதன் அனுகூலங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்ட இப்பகுதிக்கு நன்றாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளிக்கவில்லை என்பதுடன் அவர்கள் தொழினுட்பவியல் பற்றிய தமது பொது அறிவைக் கொண்டு விடையளித்திருந்தனர்.

**பகுதி (b)** இங்கு நிறுவனமொன்றிற்கு நிலைப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டன. அதிகளவான பரீட்சார்த்திகள் ''நிலைப்படுத்தல்'' என்ற சொற்பதம் பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் தமது பொது அறிவைக் கொண்டு இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்களிவ் பலர், நிலைப்படுத்தலை சந்தையின் அமைவிடம் அல்லது இடம் என்றவாறு பிழையாக விளங்கியிருந்தனர். இதனால் இவ்வினாவுக்கான செயலாற்றுகை மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## வினா இல. 05

இங்கு தொழிற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான பரீட்சார்த்திகளின் நடைமுறை அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. எனவே பரீட்சார்த்திகள் தொழிற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான தமது நடைமுறை அறிவினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

**பகுதி (a)** இப்பகுதி, தற்காலச் சூழமைவில் தொழிற்பாட்டு முகாமையாளர் ஒருவர் எதிர்நோக்குகின்ற சவால்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள், சவால்களை விவரிப்பதற்குத் தவறியிருந்ததன் காரணமாக இவ்வினாவுக்கு சராசரியான புள்ளிகளையே பெற்றிருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள், தொழிற்பாட்டு முகாமைத்துவம் பற்றிய நடைமுறை அறிவு இல்லாமை காரணமாக இப்பகுதிக்கு தெளிவற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** இப்பகுதி, பயனுறுதிமிக்க வியாபாரத் தொடர்பாடல் முறைமையொன்றின் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர்களில் பெரும்பாலானவர்கள், தொடர்பாடல் முறைமை பற்றி விளங்கிக்கொள்ளவில்லை என்பதுடன் அவர்கள் நல்ல தகவலின் பண்பியல்புகளை எழுதியிருந்தனர். அதன் விளைவாக, அத்தகைய பரீட்சார்த்திகளால் இப்பகுதிக்கு நியாயமானளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே, விடையளிப்பதற்கு முன்னர் வினாவை நன்கு வாசித்து, விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

## பகுதி – C

இப்பகுதி 20 புள்ளிகளுக்காக 01 கட்டாய வினாவைக் கொண்டுள்ளது.

## வினா இல. 06

இது போக்குவரத்துத் தொழிலில் ஈடுபடும் இலங்கைக் கம்பனியான **சுப்பர் மூவ் கம்பனி** தொடர்பான விடய ஆய்வு வினாவாக அமைந்திருப்பதுடன் இங்கு சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகியவை பற்றிய அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் அவர்களில் பலர் உயர்ந்தளவான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (a)** இவ்வினா பயனுறுதிமிக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நன்மைகள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்திற்கு பயனுறுதிமிக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் ஊடாக **சுப்பர் மூவ்** இனால் ஈட்டப்படும் நன்மைகளைத் தெளிவாக எழுதி, உயர்ந்தளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் நன்மைகளுக்குப் பதிலாக பயிற்சி நிகழ்ச்சித்திட்ட நிலைகளை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தை வாசித்து சரியானவாறு நன்மைகளை எழுதியிருக்கவில்லை.

**பகுதி (b)** இவ்வினா சந்தைப்படுத்தல் எண்ணக்கரு மீதான அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்த்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் **சுப்பர் மூவ்** இனால் பயன்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் எண்ணக்கருக்களை எழுதி, உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் எணக்கருவைச் சரியானவாறு விபரித்திருக்கவில்லை.

**பகுதி (c)** இவ்வினா **சுப்பர் மூவ்** இன் சேவைத் தரத்தின் பரிமாணங்களைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர். இது, சேவைத் தரத்தை அடையாளங் காண்பதில் பரீட்சார்த்திகளால் மோசமான செயலாற்றுகையைக் காட்டியது. சொற்ப அளவிலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எனவே, பரீட்சார்த்திகள் உயர்ந்தளவான புள்ளிகளைப் பெறுவதற்காக, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் பாடப்புத்தகத்தை நன்கு படித்தல் வேண்டும்.

**பகுதி (d)** இப்பகுதி, தகவல் முகாமைத்துவத்திற்காக நவீன தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதை மையமாகக் கொண்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் **சுப்பர் மூவ்** இனால் பயன்படுத்தப்படும் நவீன தொழினுட்பவியலின் அனுகூலங்களை விபரித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும் சொற்பளவிலான பரீட்சார்த்திகள் விவரணத்துடன் தொடர்புபட்டதாக விடைகளை எழுதாமல், நவீன தொழினுட்பவியல் பற்றிய தங்களுடைய பொது அறிவைக் கொண்டு தெளிவற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு**

**கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன் பரீட்சார்த்திகளுக்காகத் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

2. இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட **சுய கற்றல் புத்தகம்** முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதால் அதிலிருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக்கொள்ளவும்.

3. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

4. விடையளிக்கும்போது நேர முகாமைத்துவம் முக்கியமானது.

5. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

7. வினாப்பத்திரத்திலேயே விடைகளை எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டாம்.

8. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளித்துப் பயிற்சி பெறுவதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கும்.

9. அறிவினை நிகழ்நிலைப்படுத்திக் கொள்வதற்காக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துங்கள்.

10. வினாக்களுக்கு விடையளிக்காது இருப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். இப்பழக்கம் குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

11. நல்ல முன்னாயத்தத்துடன் பெரும்பாலும் பரீட்சையில் சித்தியடையும் நம்பிக்கையுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -